அல்வாய்

# மனோகரா சனசமூக நிலையம்

# 85 ஆவது

# ஆண்டு நிறைவுவிழா

# 1927 - 2012

2012 - 12 - 22

## அல்வாய் மனோகரா சனசமூக நிலைய நிர்வாக சபை - 2012 - 2013



## அல்வாய் மனோகரா சனசமூக நிலையம்

## நிலையக் கீதம்

ராகம் : ஹம்சத்வனி தாளம் : ஆதி

**பல்லவி**

வாழிய வாழிய வாழியவே - எங்கள்
அல்வாய்ப் பதியின் தலைமை நிலையம்
வாழிய வாழியவே வாழிய வாழியவே.

**அநுபல்லவி**

மனோகரா சனசமூக நிலையம்
மாண்புகழ் சாதனை நாட்டிடும் நிலையம்

(வாழிய)

**சரணம்**

01. கல்வி கலையுடன் களிவிளையாட்டும்
தொல்சீர்ப் பெருமையும் துலங்கிடும் நிலையம்
பல்துறை வல்லுனர் வாழிடமாய்க் கொள்
அல்வாய்ப் பதிப்பெயர் பொறித்திடும் நிலையம்

(வாழிய)

02. கவினுறு கலையாய் கண்கவர் கூத்தும்
செவிநுகர் இசையும் செந்நெறிக் கலைகளும்
புவியினுள்க் களித்திடும் பெற்றியர் பிறந்து
பவித்திரம் பேணிடும் பொற்புறு நிலையம்

(வாழிய)

03. ஆய்ந்தாலடி அமர் பால கணபதி
பாய்ச்சும் அருளொளி பரவும் நிலையம்
தோய்ந்து பல்சேவை ஆற்றும் நிலையம்
தாய்ச் சங்கமதாய்த் திகழும் நிலையம்

(வாழிய)

**இறுவட்டு வாயிலாக** **ஆக்கம் – கலாநிதி த.கலாமணி.**

**குரல் – கலாநிதி த. கலாமணி.**

**திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா (விரிவுரையாளர் தேசிய கல்வியியற் கல்லூரி)**

**இசையமைப்பு : அருணா கேதீஸ்**

# அல்வாய்
# மனோகரா சனசமூக நிலையத்தின்
# 85 ஆவது ஆண்டு நிறைவுவிழா

**காலம் :** 2012.12.22 சனிக்கிழமை பி.ப.5.00மணி

**இடம் :** மனோகரா விளையாட்டு மைதானம்

**தலைமை**

திரு.ந.துரைராஜா

(தலைவர், அல்வாய் மனோகரா சன சமூக நிலையம்)

**விசேட விருந்தினர்கள்**

திரு.க.செவ்வேள்

(இயக்குநர், UR Friends Foundation)

திரு.சி.சிவஸ்ரீறி

(பிரதேச செயலர், கரவெட்டி)

திரு. த.ஜெயசீலன்

(பிரதேச செயலர், பருத்தித்துறை)

கலாநிதி.த.கலாமணி

(தலைவர், சட்டத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

திரு.சி.தில்லைநாதன்

(உதவிக்கல்விப்பணிப்பாளர், முன்பள்ளி)

திரு.த.யோகலிங்கம்

(சங்க அத்தியட்சகர்)

திருமதி.ஏ.எஸ்.ஏ.ஜவார்

(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)

திரு.வ.தயானந்தா-

( கிராம அலுவலர், அல்வாய்)

திரு. இரத்தினேஸ்வரக்குருக்கள்

( அல்வாய் சா.ஆ.பி.கோயில் குருக்கள்)

# நிகழ்ச்சி நிரல்

**பி.ப. 5.00 :** மனோகரா சனசமூக நிலைய முன்றலில் இருந்து விருந்தினர்கள் வரவேற்பு

**பி.ப. 5.30 :** மங்கல விளக்கேற்றல்

**பி.ப. 5.35 :** வரவேற்பு நடனம்

**பி.ப 5.45 :** வரவேற்புரை

**பி.ப 5.55 :** தலைமையுரை

**பி.ப. 6.30 :** விசேட விருந்தினர்கள் உரை

**பி.ப. 7.15 :** பரிசளிப்பு வைபவம்

**பி.ப. 7.55 :** நன்றியுரை

**பி.ப. 8.00 :** முன்பள்ளி சிறார்கள் நடனம்

**பி.ப. 8.05 :** சிறப்புப் பட்டிமன்றம்

**தலைப்பு**

தனிமனித முன்னேற்றத்தை வடிவமைப்பதில் பெரிதும் பங்காற்றுவது கடந்தகால கசப்பு அனுபவங்களா? எதிர்கால இனிமைக்கான ஏக்கங்களா?

**நடுவர்**

சைவப்புலவர் கீழ்க்கரவை திரு.எஸ்.நவரட்ணம்

**கடந்தகால கசப்பு அனுபவங்களே!**


திரு.அ.பௌநந்தி
திரு.ம.பா.மகாலிங்கசிவம்
திரு.இ.சர்வேஸ்வரா

**எதிர்கால இனிமைக்கான ஏக்கங்களே!**

திரு.வை.விஜயபாஸ்கர்
திரு.ந.குகபரன்
திரு.வே.சிவராஜா

**பி.ப. 9.15 :** கலை நிகழ்வுகள்
**பி.ப. 10.30 :** நிகழ்வுகள் நிறைவு

# அல்வாய் மனோகரா சனசமூக நிலைய நிர்வாக சபை - 2012 - 2013



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : ந. அரியநாயகம் (உறுப்பினர்), ம.சபாமணி (உபசெயலாளர்), செ. சுபேந்திரா (செயலாளர்), ந.துரைராஜா (தலைவர்), ச.ஸ்ரீதரன் (பொருளாளர்), வி.சுந்தரலிங்கம் (உபதலைவர்), த.இராஜேஸ்வரன் (உறுப்பினர்),
நிற்பவர்கள் இடமிருந்து வலம் : ஸ்ரீ.ரமணன் (உறுப்பினர்), க.பரணீதரன் (உறுப்பினர்), த.காந்தரூபன் ( உறுப்பினர்), வெ.துஷ்யந்தன் (உறுப்பினர்), க.ஜெயதர்சன் ( உறுப்பினர்), ம.நிதர்சன் (உறுப்பினர்), பா.பிரதீப் (உறுப்பினர்), ம.கணேசலிங்கம் (உறுப்பினர்)

# தலைமையுரை.....

இன்றைய இந்த நிகழ்வின் விருந்தினர்களாக வருகைதந்து இந்த விழாவை சிறப்பித்துக்கொண்டிருக்கும் விருந்தினர்களே, பெரியோர்களே, சபையோர்களே உங்கள் அனைவருக்கும் எனது இந்நேர வணக்கங்கள் உரித்தாகட்டும்.

எனதருமை எமது கிராமத்து உறவுகளே, இன்றையநாள் எமது கிராம வரலாற்றிலும் சரி, எமது நிலைய வரலாற்றிலும் சரி ஒரு உன்னதமான நாள். எமது அல்வாய் மனோகரா சனசமூக நிலையம் உதயமாகி இன்று 85 ஆவது ஆண்டு பூர்த்தி நிறைவு விழாவில் நாம் எல்லோரும் சங்கமித்துள்ளோம். உண்மையில் எமது கிராமமே இன்று விழாக்கோலம் பூண்டு எமது நிலையத்தின் இந்த ஆண்டு நிறைவு விழாவை ஒருமித்து ஒற்றுமையாக கொண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் உண்மையில் எமது நிலைய அன்னையின் விழுதுகளாக இருக்கின்ற நாம் எல்லோரும் நிச்சயமாக பெருமை கொள்ளவேண்டிய ஒரு மகோன்னதமான ஒரு நாள் இன்று ஆகும்.

ஒரு நிலையத்தினுடைய 85 ஆவது ஆண்டு நிறைவு என்பது மிகச் சாதாரணமான ஒரு விடயம் அல்ல உண்மையில் 85 வருடங்கள் என்பது தனி மனித ஆயுளிலும் சரி, ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியிலும் சரி ஒரு இமாலய சாதனை என்று சொல்லப்போகின் அது மிகையாகாது. 1927ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட எமது நிலையத்திற்கு 2012 ஆம் ஆண்டு 85ஆவது ஆண்டு நிறைவு ஆண்டாக இந்த வருடத்தின் ஆரம்பத்தில் எமது கிராம மக்களின் தீர்க்கமான ஆதரவோடு பிரகடனப் படுத்தியிருந்தோம்.

அந்த வகையில் தலைவர் என்ற ரீதியில் எமது நிலையத்தின் 85 ஆவது ஆண்டு நிறைவு விழாவான இன்று நிறைவு விழா குறித்த ஒரு கையேடு வாரியாக எமது கிராம மக்களின் மகிழ்ச்சியையும், எமது நிர்வாக கால சில பல நடவடிக்கைகளையும் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்சியடைகிறேன். எமது நிலைய ஆண்டு நிறைவு விழா நிகழ்சி நிரல்கள், எமது நிலைய, கீதம், மற்றும் தலைவர் என்ற வகையில்

தலைமையுரை என்பவற்றை இக் கையேடு தாங்கி வந்திருக்கின்றது. குறுகிய காலத்தில் தயார் செய்யப்பட்ட இந்தக் கையேடு எமது நிலைய ஆண்டு நிறைவு விழா குறித்த ஒரு நினைவுக்கேயேடே தவிர 'நிலைய வரலாற்று' ஏடு அல்ல என்பதனையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதன் பிரகாரம் இந்த ஆண்டில் பல்வேறு விதமான விசேட நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு, பல் பரிணாமம் மிக்க நிகழ்வுகள் பலதையும் நடாத்தியிருந்தோம். எல்லாவற்றையும் சிறப்பாக நடாத்தி முடித்து இன்று இந்த ஆண்டு நிறைவு விழாவை மிகச் சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் எமது நிலையத்தின் 85 ஆவது ஆண்டு நிறைவுவிழா கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் எமது நிலையத்தின் தோற்றுவாய்க்கு வித்திட்டவர்கள், எமது நிலைய வளர்ச்சிக்கு உரமாகிய முன்னோர்கள், எமது நிலைய வளர்சியில் பங்கெடுத்த ஆரம்பகாலம் தொட்டு இற்றைவரை தோள்கொடுத்த எமது உறவுகள். இவ்வளவு நீண்டகாலமாய் எமது நிலையத்தை சிறப்பாக வழிநடாத்திய முன்னாள் தலைவர்கள், அங்கத்தவர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக எமது கிராமமக்கள் என எல்லோரையும் ஒரு கணம் இந்நேரத்தில் மகிழ்வோடு நினைத்துப் பார்க்கின்றோம்.

அல்வாய் மனோகரா சனசமூகநிலையமும், சரி அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் சரி பல்வேறு சிறப்புக்களை தம்மகத்தே கொண்டிருப்பினும் இவற்றுக்கென ஒரு நீண்ட கால பாரம்பரியம் கொண்ட தனித்துவம் ஒன்று இருக்கின்றது. இத் தனித்துவம் காரணமாகவே 'அல்வாய் மனோகரா' என்றவுடன் எப்பிரதேசத்திலும் உள்ளவர்களாலும் எம்மை உடனடியாக அடையாளப்படுத்த வல்ல வலிமை ஒன்று எமக்குள் இயல்பாகவே உருவாகியது. அந்த நடைமுறையில் கட்டுமானம் காரணமாகவே நாம் இன்று மட்டுமல்ல என்றும் ஒரு தனித்துவம் மிக்க நிலையமாயும் சரி கழகமாயும் சரி மிளிர்கிறோம் என்பது எக்காலமும் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகிறது.

எமது அல்வாய் மனோகரா சனசமூக நிலையமானது நீண்டகால பாரம்பரியம் மிக்க ஒரு தனித்துவமான நிலையமாகும். இன்னும் பதினைந்து ஆண்டுகளில் நூற்றாண்டு விழாவினை காணவுள்ள எமது நிலையமானது எமது கிராமமக்களின் அறிவு, பண்பாடு, ஒழுக்கம், சமூகவிழுமியம், விளையாட்டு என்பவற்றின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுவதோடு சமூக நன்மதிப்பினை உயர்த்துவதில் பங்களிப்புச் செய்துவருகின்றது.

இவ்வாறு பல்வேறு உயரிய சிந்தனைகள் உன்னதமான இலட்சியங்கள் என்பவற்றோடு பயணித்து இன்று 85 ஆவது ஆண்டு விழாவை பூர்த்தி செய்யும் இந்நேரத்தில் இந்தப் பாரிய ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் இக்காலகட்டத்தில் எமது நிலையத்தின் தலைவராக இருப்பதையிட்டு பேருவகை அடைகின்றேன். அத்தோடு நாம் கடந்து வந்த அண்மைக்காலங்கள் சிலவற்றை மீட்டிப் பார்க்க வேண்டிய கடப்பாடும் இருக்கின்றது. இந்நிலையத்தின் தலைவராக இருந்த காலம் தொட்டும், அதற்கு முன்னர் மீளமைப்புக்குழு என்ற அபிவிருத்திக் குழுவில் இருந்தவர் என்ற ரீதியில் எமது நிர்வாகமும், மீளமைப்புக்குழுவும் மேற்கொண்ட அபிவிருத்திகள் தொடர்பாகவும், இக்காலத்தில் எமக்காய் பெறப்பட்ட அனுசரணைகள். உதவிகள் என்பன பற்றியும் இவ்வேளை இங்கு குறிப்பிட வேண்டியமை ஒரு கட்டாயமாகின்றது அது தவிர இது ஒரு தற்புகழ்ச்சிக்கான தொன்றல்ல

'அபிவிருத்தி என்பது தனியே ஈட்டப்படவேண்டியது மட்டுமல்ல அபிவிருத்தி எய்தப்படவேண்டியதுமான ஒன்று மாகும்' என்கின்ற மேலைத்தேய வாசகத்துக்கு இசைவாக

எமது நிர்வாகத்தால், மற்றும் மீளமைப்பு குழுவால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் மற்றும், ஈட்டப்பட்ட உதவிகள் என ஒரு நீண்ட பட்டியற்படுத்தல் இச் சந்தர்ப்பத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுகின்றது.

உண்மையைச் சொல்லப் போயின் இன்றைய நாள் எமது கிராம மக்கள் எல்லோருக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான நாள் ஆகும். இந்த மகிழ்ச்சி

கரமான நாளில் எமது நிலையம் குறித்த இன்னொரு மகழ்சிகரமான செய்தியையும் இந்நேரத்தில் இங்கு கூறுவது சாலப்பொருத்தமான தொன்றாக மிளிர்கிறது. ஆம் 2012 ஆம் ஆண்டிற்கான கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சனசமூக நிலையங்களிற்கு இடையேயான தரவரிசைப் பட்டியலில் எமது அல்வாய் மனோகரா சனசமூக நிலையம் சிறந்த நிலையமாக தெரிவுசெய்யப்பட்டு முதலாம் இடத்தை பெற்றிருக்கின்றது என்கின்ற மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்த வெற்றி என்பது மிகச் சாதாரணமான ஒன்றாக பார்க்கப்பட வேண்டிய தொன்றல்ல. அதுவும் எமது நிலையம் இந்த இமாலய ஆண்டு நிறைவை கொண்டாடும் இந்நேரத்தில் எமது நிலையத்திற்கு கிடைத்திருப்பது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை தருகின்றது. இந்த வெற்றியை எமது நிலைய மக்களுக்கும், அங்கத்தவர்களிற்கும் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அடுத்து நீண்டகால பாரம்பரியம் மிக்க எமது நிலைய வரலாற்றில் ஒரு மிக முக்கியமான ஒரு செயற்பாடும் இந்த வருடம் மேற்கொள்ளப்பட்டது. அது என்னவென்றால் எமது நிலையத்திற்கான மிகச்சிறப்பான 'நிலையகீதம்' ஒன்று எழுதப்பட்டு, இசை அமைக்கப்பட்டு, பாடல்வாயிலாக வெளிவந்து எங்கள் எல்லோரையும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைக்கும் முகமாகவும், எமது மண்பற்றை வெளிக்கொணரும் முகமாகவும், எமது கிராமத்து பண்பாட்டுவாசம் கமழ, நிலையத்து சூழமைவுகள் மற்றும் அல்வாய் மனோகராவின் தனித்துவங்கள் என எல்லாம் நிரம்பலான ஒரு நிலையகீதத்தை நாம் உருவாக்கியிருக்கின்றோம். எமது வேண்டுகோளுக்கு இணங்க அதனை மிகவும் சிறப்பாக எழுதி, மெட்டமைத்து, ஒலிப்பதிவுப் பொறுப்பையும் தானே மேற்கொண்டு தனது குரலில் பாடியிருக்கின்ற எமது நிலைய அங்கத்தவர் கலாநிதி த. கலாமணி அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளை கூறிக் கொள்கின்றேன்.

எமது நிலையத்தின் 85 ஆவது ஆண்டளவில் எமது நிலையத்திற்கான இந்த நிலைய கீதம் எம்மால் உருவாக்கப்

பட்டிருக்கின்றமை மிகவும் மகிழ்ச்சிகரமான ஒரு மன நிலையை எமக்குத் தருவித்திருக்கின்றது என்பதே நிதர்சன உண்மை ஆகும். இவ்வாறு பல சிறப்புக்கள் அடங்கிய எமது நிலையத்தின் ஆண்டு விழாவில் இன்று நாம் எல்லோரும் மிகுந்த மகழ்சியோடு இருக்கின்றோம்.

எமது நிலையத்தின் தலைவராக பதவி வகுத்த காலங்கள் மிகவும் மகிழ்ச்சிகரமான காலங்கள். ஆயினும் தலைவராக பதவி வகுப்பதற்கு முன்னர் ஊரக மறுசீரமைப்புக் குழு என்கின்ற ஒரு குழுவை ச. ஸ்ரீதரன் மற்றும் டாக்டர் வே. கணேசவேல் ஆகியோருடன் இணைந்து ஆரம்பித்திருந்தோம். ஊரக மறுசீரமைப்புக்குழு என்ற இந்த அமைப்பினூடாக பல்வேறு அபிவிருத்திகளை நாம் மேற் கொண்டிருந்தோம். ஊரகமறுசீரமைப்பு குழுவில் இருந்த காலத்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட சில அபிவிருத்தி பணிகளின் நிறைவுப் பணி நாம் நிர்வாகம் வகித்த காலத்தில் நிறைவு செய்யப்பட்டமையினால் மீளமைப்புக் குழுவினதும், எமது நிர்வாகத்தினதும் சில பாரிய பணிகள் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவை கட்டாயம் ஆகிறது. உண்மையில் இவை ஒரு தற்புகழ்ச்சியிலானவையோ, அல்லது ஆவணப்படுத்து வதற்காகவோ இல்லை என்பதனையும் குறிப்பிட்டாக வேண்டும்.

ஆரம்பத்தில் 1996ஆம் ஆண்டளவில் எமது நிலையத்தின் அனுசரணையோடு எம்மால் ஆரம்பிக்கப்பட்ட மீளமைப்புக்குழு எமது கிராமத்திற்கான மின்சார வசதிகள் தொடர்பாக எமது வேண்டுகோளுக்கிணங்க அக்கால நெருக்கடியான ஒரு சூழமைவில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் அக்காலப் பகுதியில் மின்சார சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு தொடர்ச்சியான, சீரான ஒரு கட்டுக்கோப்பில் எமது கிராமத்திற்கு வரவழைக்கப்பட்டது. அதன் பின்னர் நீண்டகாலமாக சிறப்பாக இயங்கிவந்த எமது நிலைய கட்டடம் கால ஓட்டத்தில் கட்டட வெடிப்பு, இன்னும் இன்னுமாக பல அபிவிருத்திகளை உள்வாங்கி புதிய நிலைய கட்டடம் ஒன்று அமைக்கப்படவேண்டிய அத்தியாவசியம் ஒன்று காணப்பட்ட அக்காலகட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மூலமாக ஆரம்பத்தில் கிடைக்கப்பெற்ற சில நிதி உதவிகளை வைத்து அப்போதைய நிர்வாகத்தினர் இந்த கட்டட வேலைப்பாடுகளை ஆரம்பித்தனர். ஆயினும் நிதிப்பற்றாக்குறை காரணமாக முழுமையாக

வேலைகளை தொடர முடியாமல் இருந்தது. இதன் காரணமாக நீண்ட காலங்கள் எமது நிலையம் கட்டட ரீதியாக ஒரு தேங்கல் நிலையில் காணப்பட்டது. இந்த நிலை எமது கிராம மக்கள் ஒவ்வொருவரிடையேயும் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தியது. இதன் காரணமாக மீளமைப்புக் குழுவினராகிய நாம் எவரும் பொறுப்பேற்றுச் செய்யமுடியாத இந்த வேலைகளை துணிச்சலாகப் பொறுப்பேற்று பல நிதியுதவிகளை பாராளுமன்ற உறுப்பினர்களிடையேயும், நிறுவனங்கள் வாயிலாகவும் பெற்று குறிப்பிட்ட ஒரு காலத்தில் மிகச் சிறப்பாக எல்லோரும் மனமகிழ்வு அடையும்படியாக எமது அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தை, நிலையகட்டடத்தை வெற்றிகரமாக செய்து முடித்தோம்.

எத்தனையோ போராட்டங்கள், எவ்வளவோ அலைக்கழிப்புக்கள், எவ்வளவோ பிரச்சினைகள் என்பவற்றின் மத்தியில் இந்த நிலையகட்டட அமைப்பு பணியை எமது கிராம மக்களின் தீர்க்க ஆதரவோடு வெற்றிகரமாக செய்து முடித்தோம். இந்த நிலைய அமைப்பில் எமக்கு தோள்கொடுத்து உதவிய அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களை நாம் மறந்துவிட முடியாது அந்த வகையில்,

| | |
|---|---|
| கௌரவ அமைச்சர் K.N. டக்ளஸ் தேவானந்தா | 1 50000 |
| 2003 கஜேந்திரகுமார் பா.உ. கட்டட அபிவிருத்திக்கு | 100000 |
| 2003 தி. மகேஸ்வரன் பா. உ. மைதான அபிவிருத்திக்கு 200 பை சீமெந்து | |
| 2004 கி. கி. சிவனேசன் பா.உ. நிலைய நூல் கொள்வனவிற்கு | 50000 |
| 2004 கஜேந்திரகுமார் பா.உ. அணைகட்டுவதற்கு | 100000 |
| 2005 கஜேந்திரகுமார் மைதான திருத்த வேலைக்கு | 50000 |
| 2007 கி.சிவநேசன் பாலர்பாடசாலை தளபாடத்திற்கு | 50000 |
| சிவாஜிலிங்கம் | 175000 |

இப்படியான இந்தநேரத்தில் நாம் இவர்களை மறந்துவிட முடியாது. மீளமைக்குழுவில் இருந்த காலத்தில் எம்மால் மேற்குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களிடையே முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இசைவாக எமது நிலையத்திற்கு இந் நிதி உதவிகளை

இவர்களிடையே இருந்து எமது நிலையத்திற்கென பெற முடிந்தது. மேலும் இக்காலகட்டத்தில் கட்டாயமும், மிக அவசியமுமான சில நடவடிக்கைகளும் எம்மால் மேற்கொள்ளப்பட்டது.
அந்த வகையில், 2005 இல்,

- ❖ கிளானை கழுக்காவத்தை வீதி செப்பனிடப்பட்டது.
- ❖ அல்வாய் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் வீதிப்பாலம் புனரமைக்கப்பட்டது.
- ❖ அல்வாய் மனோகரா பாலர்பாடசாலை அமைக்கப்பட்டது. கரித்தாஸ் கியுடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டது.

இவ்வாறு பல அபிவிருத்தி வேலைகளை மீளமைப்புக்குழு என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்டிருந்த இக்காலகட்டத்தில் 2008 ஆம் ஆண்டு அல்வாய் மனோகரா சனசமூக நிலைய நடப்பாண்டு நிர்வாக பொறுப்பு எனது தலைமையில் எம்மிடத்தே வழங்கப்பட்டது. மிகுந்த மகிழ்ச்சியோடு இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட எமது அப்போதைய நிர்வாகத்தில் இளைஞர்கள் பலரும் எம்மோடு இந்த நிர்வாக அமைப்புக்குள் தேர்வு செய்யப்பட்டார்கள். மிகுந்த துடிப்போடு எமது நிலைய நடவடிக்கைகளை மேற்கொண்டோம் அதன் பயனாக முதல் வருடத்திலேயே எமது நிலையம் 2008 ஆம் ஆண்டு கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நிலையங்களுக்குள் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டது. இந்த வெற்றி அப்போது எமக்கு இன்னும் உயரிய ஒரு தூண்டுகோலாக அமைந்தது. 2008 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆன இற்றைவரை ஒவ்வொரு புதிய நிர்வாகத் தெரிவிலும் தலைவர் பதவியை யாரும் ஏற்றுக்கொள்ள முன்வராதமையினால் பொதுச்சபையின் தீர்மானத்திற்கு இசைவாகவே நான் தலைமை பதவியை வகித்துக் கொண்டிருக்கின்றேனே தவிர பதவிச் சுகம் நாடியோ, தேடியோ இல்லை என்பதையும் மிகவும் அன்பாக இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். பதவி வகித்த காலம் தொட்டு இற்றைவரை முடிந்தளவிற்கு பல அங்கத்தவர்களோடு ஒன்றிணைந்து பல அரிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருக்கின்றோம் என்பதையும்

கூறிக்கொள்ள விரும்புகின்றேன். 2008 இல் இருந்து இற்றைவரை எமது தலைமையில் பல நிர்வாக உறுப்பினர்களும் எம்மோடு கைகோர்த்து எமது கிராம அபிவிருத்திக்கு ஒத்தாசை புரிந்திருக்கின்றனர். அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியோடு நினைவு கூருகின்றேன்.

இந்த ஐந்து வருடங்களும் பல அபிவிருத்திகளையும், ஆரோக்கியமான பல செயற்பாடுகளையும் நாம் மேற்கொண்டிருக் கின்றோம். அந்த வகையில் அல்வாய் தெற்கு அல்வாய் வடக்கு இணைப்புப் பால ஆரம்ப துரித வேலைப்பாடுகள் மீளமைக்குழுவில் இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டு எமது நிலைய நிர்வாக காலத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. யாழ் மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் அவர்கள் வருகைதந்து ஆரம்பவிழாவை சிறப்பித்து பாலத்தை திறந்து வைத்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் மேலும் சில எமது நிர்வாக பணிகளையும் பட்டியல் படுத்தவேண்டிய அவசியம் இருக்கின்றது. அந்த வகையில்

- *2009 ஆம் ஆண்டு புதிய பாலம் அமைந்துள்ள பகுதிக்கு மின்சார விநியோகத்தை (கமநெகும) திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுத்தோம்.*
- *2009 முன்பள்ளிக்கான முன் வீதி பிரதேச சபையால் அமையப்பெற்றது.*
- *2009 முன்பள்ளி குழாய்கிணறு அமைக்கப்பட்டது.*
- *2009 உலக வங்கி வீட்டுத்திட்டத்தின் கீழ் 9 பேருக்கு வீடு வழங்கப்பட்டது.*
- *2010 இல் அல்வாய் ஆமணந்தறை ஆலடிபிள்ளையார் வீதி எமது கோரிக்கைக்கு இசைவாக 2012 இல் நடைமுறைப்படுத்தப் பட்டிருக் கின்றது.*
- *2009 திரு. த. யோகலிங்கம் அவர்களின் அனுசரணையில் 50 பேருக்கு இலவச ஆங்கில வகுப்பு நடாத்தப்பட்டது.*
- *2005 ஆரம்பிக்கப்பட்ட எல்லை மாற்றம் 2011 ம் ஆண்டு இரு பிரதேச செயலர்களிடையேயும் சிபார்சு செய்யப்பட்டு அனுப்பட்டது.*

- 2009 I.O.M. நிறுவனத்திடமிருந்து ரூபா 50000 பெறுமதியான விளையாட்டு உபகரணம் பெறப்பட்டது.
- 2008 கஜேந்திரகுமார் அவர்களிடமிருந்து விளையாட்டு உபகரணங்களுக்கென 50 000 பெறப்பட்டது.
- 2012 முன்பள்ளிக்கான கணனி கொள்வனவை மேற்கொள்ள மாவை சேனாதிராஜா அவர்கள் 75000 ரூபா வழங்கினார்.
- 2012 தளபாட கொள்வனவிற்கு மாவை சேராதிராசா 25000 வழங்கினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக எமது கிராமத்தின் நீண்டகால தேவைகளில் ஒன்றாக இருந்த பங்குவேம்படி மயானத்திற்கும் எமது மைதானத்திற்கும் இடைப்பட்ட தடுப்பு சுவர் அமைக்கும் பணியானது எமது நிலைய அங்கத்தவர்களான க. றுபேஷ், யோ. சிவகாந், ஸ்ரீ.முகுந்தன் ஆகியோரின் ஏற்பாட்டுக்கு அமைவாக உயர்திரு. செவ்வேள் அவர்களால் இம்மதில் அமைக்கும் பணியிற்கான முழுப்பொறுப்பும் ஏற்றுக்கொள்ளப்பட்டு முதற்கட்டமாக வழங்கப்பட்ட குறித்த ஒரு தொகை நிதியின் மூலமாக அத்திவார அமைப்பு, பத்திரிப்புகட்டு, மேலும் நான்கு வரி உயர கட்டுமானப்பணியை இதுவரை எமது கிராம இளைஞர்களின் பேருதவியோடு நடாத்திக் கொண்டிருக்கின்றோம். அண்மையில் அதன் அத்திவார ஆரம்பிப்பு விழாவையும் மிகக் கோலாகலமாக நாம் நடாத்தியிருந்தோம். இந்த நேரத்தில் எமக்கு இந்த உதவியை செய்து கொண்டிருக்கும் உயர்திரு. க. செவ்வேள் ஐயா அவர்களுக்கு எமது நிலையத்தின் சார்பிலும். கிராமமக்களின் சார்பிலும் நன்றிகளை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இக்காலப் பகுதியில் எமது நிலையத்துக்கான ஒலிவாங்கி அன்பளிப்பை அல்வாய் பொன்மலர்பதியைச் சேர்ந்த பொன்னையா மாணிக்கம் குடும்பத்தினர் எமக்கு வழங்கியிருந்தார்கள். மற்றும் பாலர் பாடசாலை தளபாடங்களை தகனை திருமதி தங்கராசா கமலாவதி ஞாபகார்த்தமாக திரு. திருமதி கௌதமன் சாந்தினி குடும்பத்தினர் வழங்கியருந்தார்கள், மற்றும் எமது பாலர் பாடசாலை சிறார்களுக்கான ஊஞ்சல் அன்பளிப்பை திரு. ந. கிருஷ்ணானந்தம் குடும்பத்தினர்

வழங்கியிருந்தார்கள். உண்மையில் இவர்கள் அனைவருக்கும் எமது நிலையத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அடுத்து எமது இந்த ஆண்டு நிறைவுவிழாவின் போது எமது மைதான அபிவிருத்திக்கென தனது சொந்த நிதியிலிருந்து ரூபா 50000 த்தை தந்துதவிய சட்டத்தரணி செல்வி. ஞானலோஜினி சிவஞானம் அவர்களுக்கும் இந்த நிதியை பெறுவதற்கான ஏற்பாட்டை செய்து தந்த வெ. துஷ்யந்தன் அவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எமது நிர்வாக காலத்தில் மிகமுக்கியமான சில உதவிகள் எம்மால் பெறப்பட்டிருக்கின்றன. இந்த உதவிகள் எக்காலமும் மறந்துவிட முடியாதவை அந்த வகையில்,

- நிலைய காணி ஆரம்பத்தில் உபகரிக்கப்பட்டு மீளவும் புனரமைப்பச் செய்யும் போது மேலும் சில பகுதிகளையும் சேர்த்து அன்பளிப்புச் செய்த திரு.திருமதி. அரியநாயகம் வனமலர் குடும்பத்தினர்.
- மைதானத்திற்கான காணி கொள்வனவின்போது ரூபா 100000 பெறுமதியான காணியினை எமக்கு பெற்றுத்தந்த அல்வாய் மாவடிச் சோலையைச் சேர்ந்த வே. சிவபாக்கியம் குடும்பத்தினர்.
- பாலர்பாடசாலைக்கான காணி அன்பளிப்பைச் செய்த திரு.திருமதி. செல்வலிங்கம் தர்மதேவி, திரு.திருமதி துரைராசா நாகேஸ்வரி, மற்றும் திரு. திருமதி. ஜெயவீரசிங்கம் இரத்தினகுமாரி ஆகியோரையும்.

நாம் மிகுந்த நன்றிக்கடன் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

அடுத்து இன்றைய எமது இந்த ஆண்டு நிறைவு விழாவானது எமது கிராம மக்களின் நிதிப்பங்களிப்பு உள்ளடங்கலான தீர்க்கமான ஆதரவுடனும், எமது கிராமத்தில் பிறந்து அயற்கிராமங்களில் மணம் முடித்த எமது நேச உறவுகளின் நிதிப்பங்களிப்புடனும் தான் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

எமது உறவுகள் அனைவரினதும் நிதிப்பங்களிப்புக்கள், பொருள் அன்பளிப்புக்கள் என உள்ளடங்கலான அனைத்து பங்களிப்புகளையும் உள்ளடங்கலான ஒரு அறிக்கைக் கையேட்டை வரும் வாரங்களில் நாம் உங்கள் கைகளில் ஒப்படைப்போம் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.


மிகக் கோலகலமான இந்த இன்றைய விழா எமது கிராமத்தின் இசை, நடன நிகழ்சிகள், பட்டிமன்றங்கள் என எமது பண்பாட்டு அடையாளங்களை முன்வைத்து மிகச்சிறப்பாக இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த ஆண்டு நிறைவுவிழா நினைவுக் கேயேட்டின் மூலம் எமது நிர்வாக செயற்பாடுகள் மற்றும் தலைவர் என்ற ரீதியில் தலைமையுரை என பலவற்றை உங்கள் முன் சமர்ப்பித்திருக்கிறோம். நிறைவாக இந்த ஆண்டு நிறைவுவிழா கொண்டாட்டமானது எமது கிராம மக்களின் தீர்க்கமான ஆதரவோடும், அயற்பிரதேசங்களில் வாழும் எமது நேச உறவுகளினதும் ஆதரவோடும், புலம்பெயர் எமது சொந்தங்களின் ஆதரவோடும் மிகச் சிறப்பாக எம்மால் முன்னெடுத்துச் செய்து இன்று மிகச்சிறப்பாக இந்த நிகழ்வை நடாத்த முடிகிறது. ஆகவே இந்த ஆண்டு நிறைவு விழாவிற்கான அத்தனை உதவிகளையும் செய்த எமது உறவுகள், குறிப்பாக எமது கிராம இளைஞர்கள், நிகழ்வில் பங்கெடுத்த சொந்தங்கள் என எல்லோருக்கும் எமது மனோகரா சனசமூக நிலையத்தின் சார்பில் உளம்கனிந்த நன்றிகளை கூறிக்கொண்டு நிறைவு செய்கிறேன்.

ந. துரைராஜா
தலைவர்
அல்வாய் மனோகரா சனசமூக நிலையம்
**22.12.2012**

# நன்றிகள்

எமது நிலையத்தின் 85 ஆவது ஆண்டு நிறைவு விழாவான இன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் விசேட விருந்தினர்கள், அயற்கிராம உறவுகள், எல்லாவற்றிற்கும் மேலாக ஆரம்பத்திலிருந்தே இந்த ஆண்டு விழாவை முன்னெடுத்துச் செல்வதற்கு எமக்கு உதவிய எமது கிராம மக்கள் மற்றும் இளைஞர்கள் என எல்லோருக்கும் எமது நிலையத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



# ஊரக மறுசீரமைப்புக் குழு



Dr.வே. கணேசவேல், ந. துரைராஜா, ச.ஶ்ரீதரன்

தமிழ்ப்பூங்கா, நெல்லியடி. - 021 2264014